# UNIVERSITY OF PERADENIYA

## CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය) පරීක්ෂණය 200 මට්ටම - 2024

**இளங்கலைமாணிப் பட்ட பரீட்சை (வெளிவாரி-புதிய பாடத்திட்டம்) 200 வது தேர்ச்சி மட்டம் - 2024**

**Bachelor of Arts (External - New Syllabus) Examination 200 Level - 2024**

**(Held in January to March 2024)**

## SUPE 208: அனர்த்த முகாமைத்துவம் DISASTER MANAGEMENT

நேரம்: **மூன்று (03) மணித்தியாலங்கள்**

**நான்கு (04) வினாக்களுக்கு** மாத்திரம் விடை எழுதுக.

தெளிவற்ற கையெழுத்துக்கு புள்ளிகள் குறைக்கப்படும். இவ்வினாப்பத்திரத்தில் மொத்தமாக ஏழு வினாக்கள் உள்ளன.

---

(1) "அனர்த்தம் மற்றும் அபிவிருத்தி ஆகிய இரண்டும் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. அனர்த்தங்களானவை ஒருபுறமாக அபிவிருத்தி முயற்சிகளை பாதிக்க முடியும் எனினும் அவை புதிய அபிவிருத்தி வாய்ப்புக்களை உருவாக்கலாம்." இப்பதத்தினை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக. (25 புள்ளிகள்)

(2) அ. அனர்த்த முகாமைத்துவத்தின் ஐந்து (05) நோக்கங்களை குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

ஆ. பொருத்தமான உதாரணங்களை வழங்குவதன் மூலம் அன்மைய அனர்த்தங்களின் வித்தியாசமான சமூக-பொருளாதார மற்றும் சுற்றாடல் தாக்கங்களை விளக்குக. (20 புள்ளிகள்)

(3) அ. பொறியியல் ரீதியான (நிர்மாண ரீதியான) மற்றும் பொறியியல் ரீதியற்ற (நிர்மாண ரீதியற்ற) அனர்த்த தணிப்பு முறைகளை வித்தியாசப்படுத்துக. (10 புள்ளிகள்)

ஆ. இலங்கையின் வெள்ளப்பெருக்கு தணிப்புக்கு பயன்படுத்தப்படும் பொறியியல் ரீதியான உபாயங்களை பொருத்தமான விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. (15 புள்ளிகள்)

(4) அ. சிறந்த அனர்த்த முகாமைத்துவத்திற்கு சமூக பங்களிப்பானது ஏன் அவசியமென நீர் கருதுகின்றீர்? விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ. இலங்கையின் கிழக்கு கரையோர கிராமமொன்றின் சமூக அமைப்பொன்றின் அங்கத்தவராக நீர் இருக்கின்றீர் என கருதுக. இந்நிலையில் சக்திவாய்ந்த சுனாமியொன்றுக்கு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டால் உடனடியாக மக்களையும் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கு சுனாமிக்கு முன்னரும், சுனாமியின் பின்னரும் என்னென்ன நடவடிக்கைகளை நீர் மேற்கொள்வீரென குறிப்பிடுக (பட்டியலிடுக). (15 புள்ளிகள்)

(5) அ. நாடொன்றிக்கு செயற்திறனான அனர்த்த முன்னெச்சரிக்கை முறைமையொன்று ஏன் அவசியப்படுகின்றனவென சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ. தேசிய மற்றும் கிராமிய மட்ட அனர்த்த முன்னெச்சரிக்கை முறைமைக்கு முக்கியத்துவம் வழங்கி, இலங்கையில் அனர்த்த முன்னெச்சரிக்கையை பரப்புவதற்கான (செய்வதற்கான) தொடர்பாடல் முறையின் (early warning communication system) செயன்முறையை விளக்குக. (15 புள்ளிகள்)

(6) அ. அனர்த்த முகாமைத்துவத்துடன்/தணிப்புடன் தொடர்புபட்ட ஐந்து (05) சர்வதேச நிறுவனங்களை பெயரிடுக. (05 புள்ளிகள்)

ஆ. மேலே குறிப்பிட்ட நிறுவனங்களில் ஒன்றினைத் தெரிவுசெய்து உலக அனர்த்த முகாமைத்துவ/தணிப்பு செயன்முறையில் அதன் பங்களிப்பினை ஆராய்க. (20 புள்ளிகள்)

(7) அனர்த்தத்தின் பிந்தைய முகாமைத்துவ கட்டங்களில் (post disaster phases) தொலையுணர்வு (Remote sensing) மற்றும் ஆளில்லா வான்வழி வாகனங்களினை (ட்ரோன்- Drones) எவ்வாறு செயற்திறண்மிக்க முறையில் பயன்படுத்த முடியுமென பொருத்தமான உதாரணங்களின் உதவியுடன் விளக்குக. (25 புள்ளிகள்)